[1981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி கிராமத்தில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், தரை மட்டத் தொட்டியும், நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. அது மட்டுமல்லாமல் ஆதி திராவிடர் காலனியிலுள்ள ஒரு துளைக் கிணறும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் 3 கிணறுகள் கட்டுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்

*வினா எண் 479—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கடனாக அரசிடமோ அல்லது வேறு ஸ்தாபனத்திடமோ வாங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) கடனைப் பரிசீலித்துத் தள்ளுபடி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கடனாக ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 10.75 இலட்சமும், தமிழக அரசு ரூ. 0.247 லட்சமும் கொடுத்துள்ளன.

(ஆ) குடிநீர்த் திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனாத லால் கடன் தள்ளுபடி செய்வதற்கில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியின் வருமானத்தில் சரிபாதி பணம் இந்தக் கடனுக்காக வட்டியைச் செலுத்துவதற்கே சென்று விடுவதால் அசலைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அதனால் அங்கே எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் செய்ய முடியாமல் தடைபட்டு இருக்கின்றன. ஆகவே அரசே இதனைப் பரிசீலித்து, அந்தக் கடனை திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று தள்ளுபடி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கடன் என்றால் அது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை என்று பொருள். ஆகவே, கடனாகக் கொடுக்கப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டங்களுக்காக நகராட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அதேமாதிரி கிராமப்பகுதியாக இருந்தால் மானியமாக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மத்திய அரசு அல்லது மாநில அரசு வழங்கி வருகிறது. அந்த அடிப்படையில் இந்தப் பேரூராட்சிக்கு அளிக்கப்பட்ட கடன் தொகையையும் ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அப்படிச் செய்வதற்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண் 480—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் இணைப்புத் திட்டமாக வழியில் உள்ள ஊர்களுக்கும் குடிநீர் வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) திருச்சி மாவட்டத்திலுள்ள கட்டளைப் பகுதியிலிருந்து காவிரி நீரை சென்னைக்கு திறந்த ஆழமான கால்வாய் மூலம் கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) இல்லை.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் ஜேடர்பாளையத்தில் இருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை அமல் படுத்துவதற்கான வகையில் அதற்கென தனி அலுவலகம் திறக்கப்பட்டு விட்டதா? திருச்சியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர ஆய்வு செய்யப்பட்டுவிட்டதா? அதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா? அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?